**Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 21.04.2026 / Script**

**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்**

**தேதி : 21.04.2026 – செவ்வாய்க்கிழமை நேரம் : மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக, தனது சொந்த மாநிலமான ஒடிசாவிற்கு ஒருநாள் பயணம் மேற்கொண்டுள்ளார்.

ஆதிசங்கராச்சாரியாரின் பிறந்த நாளையொட்டி குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் அவருக்கு மரியாதை செலுத்தினர்.

அரசின் திட்டங்களை அடித்தட்டு மக்களிடம் கொண்டு செல்வதில் குடிமைப் பணிகள் துறையின் பங்கு அளப்பரியது என்று குடியரசு துணைத் தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பரப்புரை இன்று மாலை 6 மணியுடன் நிறைவு பெற்றது.

*திரௌபதி முர்மு (13)*

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தமது சொந்த மாநிலமான ஒடிசாவிற்கு இன்று ஒருநாள் பயணமாக சென்றுள்ளார். இன்று காலை எஃகு நகரமான, ரூர்கேலாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 158 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சி மற்றும் கலாச்சார திட்டங்களைத் தொடக்கி வைத்தார். மேலும், செந்த் பகுதியில் ஒரு நவீன கோளரங்கம் மற்றம் அறிவியல் மையத்தையும் அவர் திறந்து வைத்தார். பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, ஒடிசாவில் கோயல் நகரில் அமைக்கப்பட்டுள்ள நிர்மல் முண்டா பரிவேஷ் பாதை மற்றும் ஒரு பொழுதுபோக்கு பூங்கா ஒன்றையும் பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்களுடன் கலந்துரையாடும் அவர் இன்று மாலை டெல்லிக்குப் புறப்பட்டுச் செல்கிறார்.

*சங்கராச்சாரியார் (05)*

இந்தியாவின் மிகச்சிறந்த ஆன்மிக பேரொளிகளில் ஒருவரான ஆதி சங்கராச்சாரியாரின் பிறந்த நாளையொட்டி, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு.நரேந்திர மோடி ஆகியோர் அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளனர். இது குறித்த ஒரு செய்தி தொகுப்பு

*சங்கராச்சாரியார் (17)*

குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில், ஆதி சங்கராச்சாரியார் சனாதன தர்மத்தின் காலத்தால் அழியாத ஞானத்திற்கு புத்துயிர் அளித்தார் என்று தெரிவித்துள்ளார். அவரின் போதனைகள் மக்கள் அறிவைத் தேடவும், உண்மையை உணர்ந்து கொள்ளவும், தங்கள் வாழ்வில் கருணையை வளர்க்கவும் ஊக்கமளித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார். பிரதமர் திரு.நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில், ஆதி சங்கராச்சாரியாரின் ஆழமான போதனைகள் மற்றும் அத்வைத வேதாந்த தத்துவம், உலகம் முழுவதுமுள்ள எண்ணற்ற மக்களுக்கு தொடர்ந்து வழிகாட்டி வருவதாக தெரிவித்துள்ளார். ஆன்மிக சிந்தனைக்கு புத்துயிர் அளிக்கவும், நாடு முழுவதும் ஆன்மிக மையங்களை நிறுவவும், ஆதிசங்கராச்சாரியார் மேற்கொண்ட முயற்சிகள் இன்றும் ஒரு நீடித்த உத்வேகமாக திகழ்கின்றன என்று குறிப்பிட்டுள்ளார். ஆதி

சங்கராச்சாரியாரின் ஞானம் தொடர்ந்து மக்களுக்கு வழிகாட்டுவதோடு, உண்மை, கருணை மற்றும் ஒருங்கிணைந்த நல்வாழ்வு ஆகியவற்றின் மீதான அர்ப்பணிப்பை மேலும் வலுப்படுத்தும் என்றும் பிரதமர் திரு.நரேந்திர மோடி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

*சங்கராச்சாரியார் (07)*

இதற்கிடையே, இன்று காணொளி வாயிலாக நடைபெற்ற உலக ஒற்றுமை விழாவில் உரையாற்றிய மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், தனது 32 ஆண்டு கால வாழ்க்கையில் ஆதி சங்கரர், நாட்டின் அனைத்து பகுதிகளிலும் மடங்களை நிறுவி தொண்டு செய்ததாக கூறினார். ஆதி சங்கராச்சாரியார் நித்திய ஞானம் மற்றும் ஆன்மிகத்தின் கலங்கரைவிளக்கமாக திகழ்கிறார் என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

*குடியரசு துணைத் தலைவர் -1 (19)*

அரசின் திட்டங்களையும், கொள்கைகளையும் அடித்தட்டு மக்களிடம் கொண்டு செல்வதில் குடிமைப் பணிகள் துறையின் பங்கு அளப்பரியது என்று குடியரசு துணைத் தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற குடிமைப் பணிகள் தின விழாவில் உரையாற்றிய அவர், தலைநகர் டெல்லியில் தீட்டப்படும் திட்டங்கள் அதன் உண்மையான நோக்கத்தோடு செயல்படுத்தப்படும்

போது தான் தொலைதூர கிராமங்களும் பயன்பெறுவதாக தெரிவித்தார். சர்தார் வல்லபபாய் படேலை அகில இந்திய சேவைகளின் தந்தை என்று குறிப்பிட்ட குடியரசு துணைத் தலைவர், சேவை மற்றும் ஒருமைப்பாட்டு உணர்வின் கீழ் தேசத்தை அவர் ஒன்றிணைத்தார் என்று கூறினார். சர்தார் படேலின் நடவடிக்கைகள் காலனித்துவ இந்தியா என்ற நிலையிலிருந்து வளர்ச்சியடைந்த பாரதத்தை நோக்கிய, நாட்டின் பயணத்தை சாத்தியமாக்கியுள்ளதாகவும் தெரிவித்தார். உள் கட்டமைப்பு, சுகாதாரம், கல்வி என அனைத்து துறைகளிலும் இந்தியா தற்போது உலக அரங்கில் பெருமைக்குரிய இடத்தைப் பெற்றுள்ளதாக திரு ராதா கிருஷ்ணன் குறிப்பிட்டார். இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய மத்திய பணியாளர் மற்றும் குறைதீர்ப்பு துறையின் இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையின் கீழ், நிர்வாகத்தில் ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

*குடியரசு துணைத் தலைவர் -2 (03)*

கடந்த 12 ஆண்டுகளில், நாடு நிர்வாகத்தை மையமாகக் கொண்ட ஆட்சியிலிருந்து குடிமக்களை மையமாகக் கொண்ட ஆட்சிக்கு மாறியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

*ராஜ்நாத் சிங் (16)*

பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் 3 நாள் அரசுமுறைப் பயணமாக ஜெர்மன் நாட்டிற்குச் சென்றுள்ளார். இந்தப் பயணத்தின் போது இருநாடுகளுக்கும் இடையேயான எதிர்கால பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக, அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. போரிஸ் பிஸ்டோரியஸ் மற்றும் பிற மூத்த அதிகாரிகளுடனும் திரு ராஜ்நாத் சிங் பேச்சுவார்த்தை நடத்துவார் என்று பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில் தெரிவித்துள்ளது. பாதுகாப்பு தளவாட உற்பத்திக்கான ஒருங்கிணைந்த செயல் திட்டம் மற்றும் ஐ.நா. அமைதி காக்கும் நடவடிக்கைகளுக்கான ஒருங்கிணைந்த பயிற்சித் திட்டங்கள் ஆகியவை குறித்து இருநாடுகளுக்கிடையே ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேக்-இன்-இந்தியா முன் முயற்சியின் கீழ் இருநாடுகளும் இணைந்து பாதுகாப்பு தளவாட உற்பத்தியை மேற்கொள்வது தொடர்பாக, ஜெர்மனியின் பாதுகாப்பு தொழில் துறையைச் சேர்ந்த முக்கிய பிரதிநிதிகளுடன் திரு. ராஜ்நாத் சிங் கலந்துரையாடவுள்ளார்.

*கரியா பூஜை (07)*

திரிபுரா முழுவதும் இன்று கரியா பூஜை மிகுந்த உற்சாகத்துடனும் பக்தியுடனும் கொண்டாடப்பட்டது. பாபா கரியாவை மகிழ்விப்பதற்காக இலைகள், வண்ண நூல்கள் மற்றும் துணிகளால் அலங்கரிக்கப்பட்ட மூங்கில் கம்புகள் பூக்கள் மற்றும் பழங்களையும் பக்தர்கள் காணிக்கையாக செலுத்தினர். அம்மாநிலத்தின் பல்வேறு பழங்குடியின சமூகங்களைச் சேர்ந்தவர்கள் செழிப்பு, நல்ல ஆரோக்கியம் வேண்டி பல்வேறு சடங்குகளுடன் பாபா கரியாவை வணங்கினர்.

*தமிழ்நாடு பிரச்சாரம் (06)*

தமிழ்நாட்டில் 234 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு ஒரே கட்டமாக நாளை மறுநாள் வாக்குப்பதிவு நடைபெறுவதையொட்டி இன்று மாலையுடன் தேர்தல் பிரச்சாரம் நிறைவு பெற்றது. இறுதி நாளான இன்று அரசியல் கட்சித் தலைவர்கள் சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல் உச்சகட்ட வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு

*தமிழ்நாடு பிரச்சாரம் (17)*

சென்னை சோளிங்கநல்லூர், கண்ணகி நகர், வேளச்சேரி, சைதாப்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் திமுக தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார். தமிழகத்தில் நல்லாட்சி தொடர திமுகவிற்கு வாக்களிக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார். சேலம் பகுதியில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி, திமுகவின் வாரிசு அரசியலை முடிவுக்கு கொண்டுவர தேசிய ஜனநாயக கூட்டணிக்கு வாக்களிக்குமாறு கூறினார். கோவையில் பிஜேபியின் திரு.அண்ணாமலையுடன் இணைந்து பிரச்சாரம் மேற்கொண்ட அக்கட்சியின் மகளிரணி தலைவர் திருமதி.வானதி சீனிவாசன், தேசிய ஜனநாயக கூட்டணி கோவையின் 10 தொகுதிகளிலும் வெற்றி பெறும் என்றார். திருச்செந்தூர் பகுதியில் பிரச்சாரம் மேற்கொண்ட திமுகவின் திருமதி கனிமொழி தொகுதி மறு சீரமைப்பு உள்ளிட்ட தமிழ்நாட்டிற்கு எதிரான நடவடிக்கைகளை திமுக எதிர்ப்பதாகவும், ஏராளமான நலத்திட்டங்களை செயல்படுத்தி இருப்பதாகவும் தெரிவித்தார். சென்னையில் தமிழகத்திற்கான பிஜேபி தேர்தல் பொறுப்பாளர் திரு. பியூஷ் கோயலுடன் இணைந்து செய்தியாளர்களிடம் பேசிய தெலுங்கு தேசம் கட்சியின் தலைவர் திரு. சந்திரபாபு நாயுடு,

*தமிழ்நாடு பிரச்சாரம் (15)*

பிரதமர் திரு. நரேந்திர மோடியால் மட்டுமே தமிழ்நாட்டிற்கு தேவையான வளர்ச்சியைக் கொண்டு வர முடியும் என்றார். சென்னை திருவான்மியூரில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்களுக்கு ஆதரவு கோரி பரப்பரை மேற்கொண்ட காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே சமத்துவத்திற்காகவும், சமூக நீதி வளர்ச்சிக்காகவும் தமிழக மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய ஆம் ஆத்மி கட்சியின் தலைவர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால், தமிழக மக்கள் தேசிய ஜனநாயக கூட்டணியை புறக்கணிக்க வேண்டும் என்று தெரிவித்தார். சாத்தூர் பகுதியில் பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நைனார் நாகேந்திரன், காரைக்குடி பகுதியில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான், விருத்தாசலம் பகுதியில் தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த், சென்னையில் தவெக தலைவர் திரு. விஜய் உள்ளிட்ட கட்சித் தலைவர்களும் தீவிர பரப்புரையில் ஈடுபட்டனர்.

*தேர்தல் ஆணையம் (08)*

தமிழகத்தில் இன்று மாலை 6 மணி முதல் நாளை மறுநாள் வாக்குப் பதிவு முடிவடையும் வரை பிரச்சாரப் பொதுக்கூட்டங்களை நடத்தக்கூடாது என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. திரைப்படங்கள், தொலைக்காட்சி, வானொலி, வாட்ஸ்அப் உள்ளிட்ட சமூக ஊடகங்கள் மூலமாக பிரச்சாரம் செய்யவும் தடை விதித்துள்ளது. மேலும், தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள வெளி தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் இன்று மாலை 6 மணிக்குள், தொகுதிகளை விட்டு வெளியேற வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

*மேற்கு வங்கம் (09)*

மேற்கு வங்கத்தில் 16 மாவட்டங்களைச் சேர்ந்த 152 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு நாளை மறுநாள் முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறுவதை ஒட்டி அங்கும் இன்று மாலையுடன் தேர்தல் பிரச்சாரம் ஓய்ந்தது. பிஜேபி மூத்த தலைவர் திரு. அமித்ஷா சிலிகுரி பகுதியில் பிஜேபி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பரப்புரை மேற்கொண்டார். திரிணாமுல் காங்கிரஸ் கட்சித் தலைவர் செல்வி மம்தா பானர்ஜி, மேற்குவங்கத்தின் பல்வேறு பகுதிகளில் இன்று பிரச்சாரம் மேற்கொண்டார். மேற்கு வங்கத்தில் இம்மாதம் 23 மற்றும் 29ஆம் தேதிகளில் இரண்டு கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

*புகைப்படக் கண்காட்சி (11)*

கொரியப் போரில் 1950 முதல் 1954 வரையிலான கால கட்டத்தில் இந்தியாவின் பங்களிப்பு குறித்த நடுநிலைமையின் பாதுகாவலர்கள் இந்தியாவின் கொரியப் பணி என்ற தலைப்பிலான சிறப்பு புகைப்படக் கண்காட்சி புதுடெல்லியிலுள்ள இந்திய சர்வதேச மையத்தில் இன்று தொடங்கியது. இந்தக் கண்காட்சியை கொரிய குடியரசின் வெளியுறவத்துறை அமைச்சர் திரு. சோ ஹியூன், மத்திய பாதுகாப்புத்துறை செயலர் திரு.ராஜேஷ்குமார் சிங் மற்றும் ராணுவ துணை தலைமைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தீரஜ் சேத் ஆகியோர் இன்று பார்வையிட்டனர். கொரியப் போரில் இந்தியாவின் நடுநிலைமை, ராஜதந்திரம் மற்றும் மனிதாபிமான உதவி என்பதே இக்கண்காட்சியின் கருப்பொருள் என்று பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*மீனவர்கள் (08)*

இலங்கை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 19 மீனவர்கள் இன்று விமானம் மூலம் சென்னை வந்தனர். விமான நிலையத்தில் அவர்களை வரவேற்ற தமிழக மீன்வளத்துறை அதிகாரிகள், அவர்களை சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்தனர். பாம்பன் பகுதியைச் சேர்ந்த இம்மீனவர்கள் கடந்த பிப்ரவரி மாதம் 26ஆம் தேதி இரண்டு

விசைப்படகுகளில் கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்ற போது எல்லை தாண்டியதாக குற்றம் சாட்டி இலங்கை கடற்படை அவர்களை கைது செய்தது குறிப்பிடத்தக்கது.

*வானிலை (07)*

தமிழகத்தின் மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள், தென் தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களின் கடலோரப் பகுதிகள் மற்றும், காரைக்காலில் இன்று இடி மின்னலுடன் கூடிய பலத்த காற்றுடன் மிதமான மழை பெய்யக்கூடும என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஏனைய தமிழக பகுதிகள் மற்றும் புதுச்சேரியில் வறண்ட வானிலையே நிலவக்கூடும் என்று தெரிவித்துள்ளது.

*கிரிக்கெட் (03)*

ஐபிஎல் 20-20 கிரிக்கெட் தொடரில் இன்றிரவு 7.30 மணிக்கு ஹைதராபாத்தில் நடைபெறும் போட்டியில், ஹைதராபாத் அணி, டெல்லி அணியை எதிர்கொள்கிறது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக, தமது சொந்த மாநிலமான ஒடிசாவிற்கு ஒருநாள் பயணம் மேற்கொண்டுள்ளார்.

ஆதிசங்கராச்சாரியாரின் பிறந்த நாளையொட்டி குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் அவருக்கு மரியாதை செலுத்தினர்.

அரசின் திட்டங்களை அடித்தட்டு மக்களிடம் கொண்டு செல்வதில் குடிமைப் பணிகள் துறையின் பங்கு அளப்பரியது என்று குடியரசு துணைத் தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பரப்புரை இன்று மாலை 6 மணியுடன் நிறைவு பெற்றது.